**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : STC 717/2022**

**Prosecution witness : அ.சா. 8** **Date : 15.09.2023**

| | |
|---|---|
| **Name : தங்கவேல்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ராமன்நகரில் குடியிருந்து ஓட்டல் வைத்து நடத்தி வருகிறேன். விபத்தில் இறந்தவர் எனக்கு தெரிந்த பழனிசாமி ஆகும். கடந்த 06.02.2022-ம் தேதி இரவு 9 மணி சுமாருக்கு எனது பவித்ரா ஓட்டலில் நான் இருந்தபோது, பழனிசாமி என்பவர் Hero Honda Passion Pro TN-30-AL-0727 என்ற இருசக்கர வாகனத்தில் மேட்டுர் நோக்கி சென்றபோது, எதிரில் மேட்டுரிலிருந்து மேச்சேரி நோக்கி வந்த பால் லாரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்த மோதி விபத்தை ஏற்படுத்தினார்.

2) சம்பவசமயத்தில் நான் எனது கடைக்கு வெளியே நின்றுகொண்டிருந்தபோது, பால் லாரி இருச்சக்கர வாகனத்தில் மோதுவதை நான் நேரில் பார்த்தேன். பால் லாரி ஓட்டுநரை நான் சம்பவசமயத்தில் நேரில் பார்த்தேன். தற்போது என்னால் நேரில் பார்த்தால் அடையாளம் சொல்லமுடியும். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

3) விபத்தின் காரணமாக பழனிசாமிக்கு தலை, வாய், நெற்றி, கால் ஆகிய பகுதிகளில் ரத்த காயம் ஏற்பட்டு, அவரை தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக

மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து, பின்னர் மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்து அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக தெரிந்துகொண்டேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை—</u>**

4) எத்தனை வருடமாக கடை வைத்து நடத்துகிறேன் என்றால் 3 ஆண்டுகளாக நடத்துகிறேன். ஓட்டல் உரிமையாளர் குறித்து எந்த ஆவணமும் போலிசார் பெறவில்லை என்றால் சரிதான். விபத்து குறித்து போலிசாருக்கும், குடும்பத்திற்கும் தகவல் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் அவரை காப்பாற்ற முயற்சி செய்துகொண்டிருந்தேன்.

5) மகசரில் உள்ள கடையின் உரிமையாளர்கள் அனைவரும் சம்பவயிடத்தில் இருந்து உதவினார்களா என்றால் உதவினார்கள். அவர்கள் அனைவரும் பழனிசாமிக்கு முதலுதவி செய்தார்களா என்றால் ஆமாம். எனது கடை முன்பு மண் சாலையும், அதனை அடுத்து வாகனங்கள் நிறுத்துவதற்குண்டான நிலம் உள்ளது என்றால் உள்ளது அது 20 அடி இருக்கும். எனது கடைக்கு வெளியே விறகு அடுக்கி வைத்துள்ளோம் என்றால் சரிதான்.

6) எனது கடைக்கு வெளியே தான் சமையல் செய்வோம் என்றால் சரிதான். எனது கடைக்கு முன்பாக பெரிய வேப்பமரமும், பவித்ரா ஓட்டல் பெயரில் போர்டும் உள்ளதா என்றால் உள்ளது. விபத்து சமயத்தில் நான் என்ன செய்துகொண்டிருந்தேன் என்றால் நான் நின்றுகொண்டிருந்தேன். எனது கடைக்கு முன்பாக அலுமினியம் வைத்து மறைக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. எனது கடையின் வேலை நேரம் என்ன என்றால் காலை 05.45 இரவு 11 மணி வரை இருக்கும்.

7) எனது கடையின் புரோட்டா மாஸ்டரை போலிசார் விசாரித்தார்களா என்றால் நினைவில்லை. எனது கடை சம்பவசமயத்தில் விடுமுறை என்றும், நான் கடையை அதிக நேரம் நடத்தவேண்டும் என்பதற்காக போலிசாருக்கு ஆதரவாக

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கடைக்கு உள்ளே இருந்தேன் என்றால் வெளியே இருந்தேன். சத்தம் கேட்டுதான் வெளியே வந்துதான் விபத்தை பார்த்தேன் என்றால் நேரடியாக பார்த்தேன்.

8) இறந்தவர் மதுபோதையில் வந்ததாலும் அவரின் அஜாக்கிரதையால் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. நான் அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்தாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/—தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : STC 717/2022**

**Prosecution witness : அ.சா. 9** **Date : 15.09.2023**

| | |
|---|---|
| **Name : தங்கவேல்** | **Caste :** |
| **Father's Name : பொன்னப்பகவுண்டர்** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் வீரனூரில் குடியிருந்து டைலராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்தவர் எனக்கு தெரிந்த பழனிசாமி ஆகும். ஒரே ஊரைச்சார்ந்தவர் என்பதால் எனக்கு தெரியும். கடந்த 06.02.2022–ம் தேதி இரவு 9.30 மணி சுமாருக்கு நான் எனது டைலர் கடை முன்பாக வேலையை முடித்து நின்று கொண்டிருந்தபோது, அப்போது, பழனிசாமி என்பவர் Hero Honda Passion Pro TN–30–AL–0727 என்ற இருசக்கர வாகனத்தில் மேட்டுர் நோக்கி சென்றபோது, எதிரில் மேட்டுரிலிருந்து மேச்சேரி நோக்கி வந்த பால் லாரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்த மோதி விபத்தை ஏற்படுத்தினார்.

2) பால் லாரி இருச்சக்கர வாகனத்தில் மோதுவதை நான் கடைக்கு முன்பாக நின்று கொண்டு நேரில் பார்த்தேன். பால் லாரி ஓட்டுநரை நான் சம்பவசமயத்தில் நேரில் பார்த்தேன். தற்போது என்னால் நேரில் பார்த்தால் அடையாளம் சொல்லமுடியும். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

3) விபத்தின் காரணமாக பழனிசாமிக்கு தலை, வாய், நெற்றி, கால் ஆகிய பகுதிகளில் ரத்த காயம் ஏற்பட்டு, அவரை தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் இறந்துவிட்டதாக தெரிந்துகொண்டேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

4) எனது வீட்டின் முகவரி சொல்லமுடியுமா என்றால் முடியும். எனது உறவினர் தான் விபத்தில் இறந்தார் என்றால் சரிதான். அ.சா.8 எனது பக்கத்து கடைகாரர் என்றால் சரிதான். எனது கடையின் வேலை நேரம் காலை 08.30 இரவு 09.30 வரை நடக்கும். எல்லா வேலை நாட்களிலும் கடை நடத்திவருவேனா என்றால் ஞாயிறு மட்டும் விடுமுறை ஆகும். ஞாயிற்று கிழமை தான் விபத்து நடந்தது என்றும், அன்று தான் விபத்து நடந்த சமயத்தில் நான் கடையில் இல்லை என்றால் அன்று அவசரமான வேலை என்பதால் இருந்தேன்.

5) நான் வழக்கிற்காக கடை நடத்தியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்தில இருந்து எனது கடை 200 அடி தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் சத்தம் கேட்டு பின்பு நான் விபத்து நடந்ததை பார்த்தேன் என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொன்ன தகவலைத்தான் காவல் துறையினரிடமும் சொன்னேன் என்றால் சரிதான்.

6) போலிசார் எப்போது என்னை விசாரித்தனர் என்றால் மறுநாள் விசாரித்தனர். எனது கடைக்கு பக்கத்தில் நிறைய கடைகள் உள்ளது என்றால் சரிதான். மற்ற கடைகாரர்களையும் போலிசார் விசாரித்தனரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்து குறித்து போலிசாருக்கு தகவல் கொடுத்தேனா என்றால் இல்லை. விபத்தை நான் நேரடியாக பார்க்காததால் நான் தகவல் கொடுக்கவில்லை என்றால் வேறுஒருவர் மூலமாக சொன்னேன். ஆனால் நேரடியாக பார்த்தேன்.

7) எனது கடைக்கு வெளியே மண் சாலையும், அதனை அடுத்து வாகனங்கள் நிறுத்தும் இடம் உள்ளது என்றால் பெரும்பாலும் வாகனம் நிறுத்துவதில்லை.

ஆனால் அவ்வாறு இடம் உள்ளது. இறந்தவர் மதுபோதையில் வந்ததாலும் அவரின் அஜாக்கிரதையால் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. நான் அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்தாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/-தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**